பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 10 2025** **MONDAY** **6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. **Montha** புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

2. வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகள் தமிழகத்தில் அடுத்த மாதம் **4-**ஆம்தேதி முதல் மேற்கொள்ளப்பட உள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

3. அரசியல் கட்சித் தலைவர்களின் **Road Show** நிகழ்ச்சி அனுமதிக்கான வழிகாட்டு நெறிமுறைகளை பத்து நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

4. திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெற்றுவரும் கந்தசஷ்டி விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

5. **23** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் சுஜித் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள்

<<<<<<>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள **Montha** புயல் வலுவடைந்து, ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே நாளை மாலை கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திருமதி அமுதா கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Voice Byte — அமுதா (1) 54 Sec.)***

இந்த புயல் காரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் நாளை மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் திருமதி அமுதா தெரிவித்தார்.

***(Voice Byte —அமுதா (2) - 35 Sec.)***

கடலோரப்பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்றவர்கள் உடனடியாக கரைக்கு திரும்ப வேண்டும் என்றும் திருமதி அமுதா கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று காலை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — தனசேகரன் — 34 Sec. )***

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் **215** வெள்ள நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

இதுவரை **4** லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு மூன்று வேளை உணவு வழங்கப்பட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நோய் தொற்றினால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக **400-**க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், **24** ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Montha** புயல் காரணமாக, விசாகப்பட்டினம் — சென்னை இடையேயான விரைவு ரயில் சேவை இன்றும், மறுமார்க்கத்தில் நாளையும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

<<<<<<>>>>>

வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகள் இரண்டாவது கட்டமாக **12** மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில்

மேற்கொள்ளப்பட உள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகம், சத்தீஸ்கர், குஜராத், கேரளா, ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம், ஆகிய மாநிலங்களிலும் அந்தமான் நிக்கோபார், கோவா, லட்சத்தீவு, புதுச்சேரி ஆகிய யூனியன் பிரதேசங்களிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவித்தார்.

இதன் காரணமாக இந்த மாநிலங்களில் தற்போது செயல்பாட்டில் உள்ள வாக்காளர் பட்டியல் இன்று நள்ளிரவு முதல் முடக்கப்படுவதாக அவர் கூறினார்.

வாக்காளர்கள் அனைவருக்கும் முழுமையான விவரங்களை தெரிவிக்கும் வகையில் தனித்துவ விண்ணப்பங்கள் வழங்கப்படும் என்றும், அவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 4-ஆம் தேதி தொடங்கி, டிசம்பர் மாதம் 4-ஆம் தேதிவரை வீடு வீடாக சென்று இந்த விண்ணப்பங்கள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சேர்த்தல், நீக்குதல் தொடர்பான கோரிக்கைகள் டிசம்பர் மாதம் 9-ஆம் தேதி தொடங்கி, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 8-ஆம் தேதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் திரு Gyanesh Kumar கூறினார்.

<<<<<<>>>>>

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி இதுவரை இல்லாத அளவிற்கு 23 ஆயிரத்து 500 கோடி ரூபாய் அளவிற்கு எட்டியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

இதில் தனியார் பங்களிப்பு 33 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு உள்ளது என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அரசியல் கட்சித் தலைவர்களின் Road Show நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை பத்து

நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுக்களை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு எம் எம் ஶ்ரீவத்சவா, திரு அருள்முருகன் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இவ்வழக்கின் விசாரணை அடுத்த மாதம் **11-**ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெற்றுவரும் கந்தசஷ்டி விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — தூத்துக்குடி லஷ்மணன் — 60 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காடு பகுதியில் அமைக்கப்பட்டுவரும் சர்வதேச பன்னாட்டு அரங்கத்திற்கான

பணிகளை மாநில அமைச்சர் திரு எ வ வேலு இன்று ஆய்வு செய்தார்.

---------------

காஞ்சிபுரம், மயிலாடுதுறை மற்றும் நாகை மாவட்டங்களில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மத்தியக்குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

----------------

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**23 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் சுஜித் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.**

செர்பியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், ஜப்பானின் Yuto Nishiuchi வென்றார்.

-------------------

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் மகாராஜன் ஆறுமுகப்பாண்டியன் இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

பக்ரைனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பளுதூக்கும் **60** கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கங்களை கைப்பற்றினார்.

மகளிர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Kushi Chand, Ahaana Sharma, Chandrika Pujari** மற்றும் **Anshika** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் தொடர் ஓட்டத்தில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

-------------------

கனடா ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>**